Secon...

# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விப்பீடம்

**பட்டப்பின் கல்வித்தகமைக் கற்கைநெறி (முழுநேரம்) 2016/2017 இரண்டாம் பருவம்**

**CU 504 பாடசாலை மட்டத்தில் திட்டமிடலும் முகாமைத்துவமும்**

**நேரம் மூன்று (03) மணித்தியாலங்கள்**

**முதலாம்** வினாவுக்கும் ஏனைய **நான்கு** வினக்களுக்குமாக எல்லாமாக **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக

---

1

i. இலங்கையின் கல்விமுறையின் கட்டமைப்பை எண்ணக்கரு வரைபடமாக தருக (02 புள்ளிகள்)

ii. ஹென்றிபயோலினால் முன்வைக்கப்பட்ட முகாமைத்துவச்சிந்தனைகள் நான்கு தருக (02 புள்ளிகள்)

iii. பாடசாலை அபிவிருத்திக் குழுவின் (SDC) கடமைகள் நான்கு தருக (02 புள்ளிகள்)

iv. கல்வித்திட்டமிடல் படிமுறையில் கண்காணித்தல் (Monitoring) செயன்முறையை விளக்குக (02 புள்ளிகள்)

v. பாடசாலைத்திட்டமிடல் செயன்முறையில் கவனத்தில் கொள்ளப்படும் பிரதான பரப்புக்கள் யாவை? (02 புள்ளிகள்)

vi. ஆசிரியர் வாண்மைத்துவத்தின் அடிப்படைப் பண்புகள் நான்கு தருக (02 புள்ளிகள்)

vii. பாடசாலை முகாமைத்துவத்தில் சூழ்நிலைக்கேற்றவாறு அதிபர்கள் பயன்படுத்தும் முகாமைத்துவ பாணிகள் (Management Styles) நான்கு தருக (02 புள்ளிகள்)

viii. வகுப்பறை முகாமைத்துவத்தில் ஆசிரியர்களால் கருத்தில் கொள்ளப்படவேண்டிய பிரதான விடயங்கள் எட்டினைக் (08) குறிப்பிடுக (02 புள்ளிகள்)

ix. SMART என்பதன் கருத்தினை விளக்குக (02 புள்ளிகள்)

x. ஒரு திறந்த ஒழுங்கமைப்பாக விளங்கும் பாடசாலையின் அம்சங்கள் நான்கு தருக (02 புள்ளிகள்)

2.1 Max Weber இனால் அறிமுகம் செய்யப்பட்ட பணிக்குழுவாட்சித் தத்துவத்தின் அடிப்படைகளை சுருக்கமாக விளக்குக

10 புள்ளிகள்

2.2 அரசாங்கப்பாடசாலைகளில் பணிக்குழுவாட்சிப் பண்புகளிலும் பார்க்க தொழல்வாண்மைப் பண்புகளையே அதிகளவில் காணக்கூடியதாகவுள்ளது இக்கூற்றினை உதாரணங்கள் தந்து விளக்குக

10 புள்ளிகள்

3.1 ஒரு அதிபராக பாடசாலை முகமைத்துவ வளர்ச்சிக்கு F.W Taylor இன் கோட்பாடுகளை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை விளக்குக

10 புள்ளிகள்

3.2 அரசாங்கப்பாடசாலைகளில் ஆசிரியர் செயலாற்றல்களை விருத்தி செய்வதற்கு Elton Mayo வின் மனித உறவுகள் அணுகுமுறையை எவ்வாறு பயன்படுத்தமுடியும் என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக

10 புள்ளிகள்

4.1 வகுப்பறை முகாமைத்துவம் என்பதை வரைவிலக்கணம் செய்து வகுப்பாசிரியர் ஒருவரின் கடமைகளைக் குறிப்பிடுக

10 புள்ளிகள்

4.2 கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்காக ஆசிரியர்களால் நிறைவேற்றப்படவேண்டிய கடமைகள் யாவை?

10 புள்ளிகள்

5.1 நுண்பாகத்திட்டமிடல் (Micro Planning) மற்றும் பெரும்பாகத்திட்டமிடல (Macro Planning) என்ற எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக 05 புள்ளிகள்

5.2 செயற்றிட்ட செயல் வட்டத்தின் படிகளைக் குறிப்பிடுக 05 புள்ளிகள்

5.3 பாடசாலைகளில் அதிபர்கள் திட்டமிடல் கருமங்களை முன்னெடுப்பதில் முகங்கொடுக்கும் சவால்கள் யாவை? அவற்றை தீர்ப்பதற்கான உமது பரிந்துரைகளை முன்வைக்குக

10 புள்ளிகள்

6.1 ஆசிரியர் வகைகூறல் (Teacher Accountability) என்ற எண்ணக்கருவை விளக்குக .

05 புள்ளிகள்

6.2 ஒரு வாண்மைத்துவ ஆசிரியராக கற்பித்தலுக்கு வேறுபட்ட வகிபாகம், திறன் மற்றும் குணவியல்புகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை விளக்குக

15 புள்ளிகள்

7.1 பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் (PSI) என்பதை விளக்குக

05 புள்ளிகள்

7.2 பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தீர்மானமெடுத்தல் கருமம் வினைத்திறனாகப்பட்டுள்ளது இதன் அனுகூலங்கள் யாவை?

05 புள்ளிகள்

7.3 பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பலம் மற்றும் பலவீனங்களை விளக்குகு

10 புள்ளிகள்

8.1 Mintzberg கோட்பாட்டின்படி பாடசாலை முகாமைத்துவச் செயன்முறையில் அதிபர் பல்வேறுபட்ட வகிபாகங்களுடன் பணியாற்ற வேண்டியவராக காணப்படுகிறார் இக்கூற்றினை உதாரணங்கள் தந்து விளக்குக

10 புள்ளிகள்

8.2 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் அதிபர்களால் வளர்த்துக் கொள்ளப்படவேண்டிய முகாமைத்துவ திறன்கள் யாவை?

10 புள்ளிகள்

9.1 முழுமையான கலைத்திட்டம் (Total Curriculum) என்பதை உதாரணங்கள் தந்து விளக்குகு

10 புள்ளிகள்

9.2 பாடசாலையில் மாணவர்களிடம் முழுஆழுமைவிருத்தியை (Total Personality Development) வளர்த்தெடுப்பதற்காக எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை விளக்குக

10 புள்ளிகள்

10 பின்வருவனவற்றுள் இரண்டுக்கு சிறுகுறிப்பு எழுதுக

i. ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக பாடசாலை முகாமையாளர்களுக்கு இருகாரணிக் கொள்கை எவ்விதம் முக்கியம் பெறுகிறது
ii. ஆசிரியர் நடத்தையை விருத்தி செய்வதற்கு Getzel கோட்பாடு எவ்விதம் தாக்கம் செலுத்தும் என்பதை விளக்குகு
iii. பாடசாலை முகாமைத்துவத்தில் Peter Drucker இன் சிந்தனைகளின் நடைமுறை பயன்பாடு
iv. பாடசாலைகளின் வினைதிறனை மேம்படுத்துவதற்கான உபாயங்கள்
v. பாடசாலை அபிவிருத்திக்கு சமூக – பாடசாலை தொடர்பின் அவசியம்

2x10= 20 புள்ளிகள்